UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

ஆலோசகர் குழந்தைநலவியல்
பெற்றோர்களுக்கான தகவல்

# இரைப்பைக் குடல் அழற்சி (MDG)

## MDG என்றால் என்ன?

MDG குடலில் ஏற்படுகின்ற ஒரு வைரஸ்தொற்றுநோயாகும். MDG அல்லது வேறு வைரஸ் தொற்றுநோய்களுள்ள (உ-மாக, தடிமல்) மனிதர்களிடமிருந்து இது தொற்றுகின்றது. இது வருடம் முழுவதும் வரக் கூடிய, அதிகமாகவுள்ள ஒரு நோயாகும். சளிச்காய்ச்சலுக்கு அன்ரிபயோட்டிக் மருந்துகள் பயனளிக்காதது போலவே இதற்கும் பயனளிக்காது, ஏனெனில் அம் மருந்துகள் வைரஸ் கிருமிகளை அழிக்க வல்லவையல்ல.

## ஒரு MDG நோயின் நடைமுறை என்ன?

இது வாந்தி, வயிற்றோட்டத்துடன் வரும். காய்ச்சல், தடிமல், இருமலும் கூட வரலாம். சில பிள்ளைகளுக்கு கடுமையான வயிற்றுவலியும் (Bauchkoliken) இருக்கலாம். இந்த வைரஸ"க்கள் குடலுக்குள் பல்கிப்பெருகி, மலத்துடன் வெளியேறும். இந்த வைரஸ"களுக்கெதிரான போதியளவு நிர்ப்பீடண சக்தியை உடல் உருவாக்கிய பின், நோய் குணமடையும். இது நடைபெற பொதுவாக சில நாட்கள் எடுக்கும், ஆனால் ஒரு வாரம் அல்லது அதை விட நீண்ட காலமும் எடுக்கலாம்.

## ஒரு MDG நோய்க்கு எவ்வாறு சிகிச்சையளிக்கலாம்?

முக்கியம் என்னவெனில், உடலிலுள்ள நீர் வற்றிப் போகாமல் இருப்பதற்காக, உங்கள் பிள்ளை போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும். சிசுக்களுக்கு இது மிகவும் அபாய-கரமானது.

- உங்கள் பிள்ளைக்கு அடிக்கடி ஏதாவது சிறிதளவு குடிக்கக் கொடுங்கள், ஒவ்வொரு 5-10 நிமிடங்களுக்கொரு முறை, மிடறு மிடறாக அல்லது கரண்டியளவாக, வாந்தியெடுத்தாலும் கூட, தொடர்ந்து கொடுங்கள். உங்கள் பிள்ளை எவ்வளவு குடித்துள்ளது என்பதை எழுதி வையுங்கள்.
- தாய்ப்பால் குடிக்கும் சிசுவாக இருந்தால், தொடர்ந்தும் அடிக்கடி தாய்ப்பாலைக் கொடுங்கள். மேலதிகமாக Elektrolytlösungen எனப்படும் நீராகாரத்தையும் நீங்கள் போத்தலுக்குள் விட்டுக் குடிக்கக் கொடுக்கலாம்.
- GES 45® அல்லது Oralpädon® எனப்படும் Elektrolytlösungen (நீராகாரங்கள்) பொருத்தமானவை, அவை உடலுக்குத் தேவையான உப்பையும் சீனியையும் கொண்டுள்ளன. நீங்கள் அவற்றை வைத்தியரின் பரிந்துரைச்சீட்டு இல்லாமலேயே,

Das Spital der
Eleonorenstiftung

மருந்துக்கடைகளில் வாங்க முடியும்.

- உங்கள் பிள்ளை Elektrolytlösungen ஐ குடிக்க மறுத்தால், பிள்ளைக்கு விருப்பமான குடிபானத்துக்குள் கலந்து கொடுங்கள். பழச்சாறுகள் அல்லது இனிப்பான குடிபானங்களை நீருடன் கலந்து ஐதாக்கி (1 குவளை குடிபானத்தை 4 குவளை நீருடன்) கொடுங்கள். பால் குடிபானங்கள் பொருத்தமானவையல்ல, ஆனால் உங்கள் பிள்ளை அந்த ஒன்றை மட்டுமே பருகுமாக இருந்தால், அதனைக் கொடுக்கலாம். அதனையும் 1:1 நீர் விட்டு ஐதாக்கிக் கொடுக்கவும்.
- உங்கள் பிள்ளை அவசியம் சாப்பிட வேண்டியதில்லை, ஆனால் அதற்கு விருப்பமாக இருந்தால், அது வாந்தி எடுக்காமல் இருந்தால், எல்லாவற்றையும் ருசித்துப் பார்க்கலாம். பொருத்தமானவை உப்புபிஸ்கட், வாழைப்பழம், வாட்டுரொட்டி, சோறு.
- கடுமையான வயிற்றுவலி அல்லது வாந்தி இருந்தால், வலியைக் கட்டுப்படுத்தக் கூடிய மருந்தான உ-மாக, Buscopan® அல்லது வயிற்றுக்குமட்டலுக்கெதிரான மருந்தான உ-மாக, Itinerol B6® கொடுத்துப் பார்க்கலாம். ஆனால் பிள்ளைகளுக்கு துரதிஷ்டவசமாக அவை அநேகமாகப் பயனளிப்பதில்லை. வயிற்றோட்டத்தைத் தடைசெய்யக் கூடிய Imodium® போன்ற மருந்துகள் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடாது, அவை வயிற்றோட்டத்தின் கால அளவை நீடிப்பதுடன் குடலியக்கத்தடைக்கு வழி கோலலாம்.

## எப்போது வைத்திய உதவியை நான் நாட வேண்டும்?

- எதுவுமே குடிக்க மறுக்கும் போது அல்லது ஒன்றுமே குடிக்க முடியாமல் களைத்து விடும் போது.
- உடலில் நீர் வற்றி விட்டதற்கான அறிகுறி: கண்ணீர் வராதிருந்தால், சிறுநீர் கழித்த இடைத்துணியின் (Windel) அளவு ஒரு நாளைக்கு 4 ஐ விடக் குறைவாக இருந்தால் (சாதாரணத்தை விடக் குறைந்தளவு ஈரமாக இருக்கலாம்), சோர்ந்து போயிருந்தால் (விளையாடவே விருப்பமில்லாது இருத்தல்).
- அசாதாரணமான அறிகுறிகளான தொடர்ந்து 2 நாட்களுக்கு மேலாக வாந்தியெடுத்தால், வாந்தியெடுக்கும் போது பச்சை நிறமாக அல்லது இரத்தம் கலந்து வந்தால் அல்லது மலத்துடன் இரத்தம் போனால்.
- MDG நோயானது, பிரதானமாக சிசுக்களுக்கு சில நாட்களுக்குள் சுகப்படாமல் இருந்தால்
- 3 மாதங்களுக்குட்பட்ட சிசுக்களுக்கு காய்ச்சல் அல்லது வாந்தி அல்லது வாந்தியும் வயிற்றோட்டமும் வந்து சில மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தால்.
- உங்கள் பிள்ளையின் நிலைமை கவலைக்கிடமாகியிருப்பதாக நீங்கள் உணர்ந்தால், எந்த நேரமும் நீங்கள் வைத்தியரை நாடலாம்.

UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

Das Spital der
Eleonorenstiftung

Kinderspital Zürich - Eleonorenstiftung
Steinwiesstrasse 75
CH-8032 Zürich

www.kispi.uzh.ch